## 2.19 2006–07 கால்வாய் அகலப்படுத்துதல் மற்றும் பேரூராட்சிகளில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா. அ.தி.2) துறை

அரசாணை (நிலை) எண்.173 நாள் : 29.11.2006

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 84 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள். 25.7.2006
2. அரசு ஆணை (நிலை) எண்.134 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, 29.9.2006
3. இயக்குநர் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம் இந்திய அரசு கடிதம் எண். C/7/2006–MPLADS நாள் 21.8.2006
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் நேர்முக கடித எண்.51100/06/ என் இடி எம் 3 நாள் 21.11.2006

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2006–07ம் நிதியாண்டிற்காக ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடான ரூ.1.00 கோடியில் 60 சதவீதம் (ரூபாய் அறுபது இலட்சம்) முன்னுரிமை பணிகளுக்கும் 40 சதவீதம்( ரூபாய் நாற்பது இலட்சம்) சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அவரது விருப்பத்தின் அடிப்படையில் பரிந்துரைக்கும் முன்னுரிமையற்ற பணிகளுக்கும் ஒதுக்கீடு செய்து படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. அரசு ஆணை (நிலை) எண். 134 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 29.9.2006ல் 2006–07 ஆண்டு முதல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி ஒவ்வொன்றிற்கும் முறையே ரூ.1 கோடியே 20 இலட்சம் என அதிகரித்து ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி 50 சதவீதம் (ரூ. 60.00 இலட்சம்) தொகைக்கு வரையறுக்கப்பட்ட பணிகளுக்கும் மீதி 50 சதவீதம் (ரூ. 60.00 இலட்சம் ) வரையறுக்கப்படாத பணிகளுக்காக சட்டமன்ற உறுப்பினரின் விருப்ப நிதியாகவும் பயன்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் படிக்கபட்டவை நான்கில் உள்ள தமது கடிதத்தில் படிக்கப்பட்டவை மூன்றில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு மைய அரசால் அளிக்கபட்ட தெளிவுரைகளின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு பொருந்துமாறு தெளிவுரை வழங்குமாறும் இத்திட்டத்தின் கீழ் வரையறுக்கபடாத விருப்ப நிதி ஒதுக்கீடான ரூ. 60 இலட்சத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு ஊரகப் பகுதியில் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் போன்று பேரூராட்சி பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்காக கட்டிக் கொடுக்க அனுமதிக்குமாறும், பேரூராட்சிகளில் உள்ள 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை பழுது பார்க்கவும் அனுமதி வழங்கி ஆணைகள் பிறப்பிக்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவுகளை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. ஊரக வளர்ச்சி மற்றும் வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்தினை ஏற்று பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதை போன்று

(i) அனைத்து பராமரிப்பு பணிகளும் எந்த வகையிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்திட தடை செய்யப்படுள்ளது என்றும் மேலும் காலமுறையாக செய்யப்படும் குறிப்பாக குட்டை, ஆறு ,குளம், கால்வாய் போன்றவற்றை தூர்வாரும் பணிகள் அனைத்தும் பராமரிப்பு பணியாக கருதப்படுவதால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தூர்வாரும் பணிகளை கண்டிப்பாக எடுத்துச் செய்யக் கூடாது என்று அரசு ஆணையிடுகிறது.

(ii) மேலும் கால்வாய், வாய்க்கால் ஆகியவற்றின் கரையை பலப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் போன்ற பணிகளை செய்திடவும் அந்த பணிகள் அனைத்தும் நீண்ட காலம் நீடித்து நிலைத்து நிற்க கூடியதாகவும் ஒரே ஒரு முறை எடுத்து செய்யும் பணியாகவும் அதாவது செங்கல் கருங்கல் பதித்தல் போன்ற உறுதியான பணிகளாக இருக்கவேண்டு மென்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசு அனுமதி அளித்து ஆணையிடுகிறது. (Strengthening of embankments and widening of channels and canals can be permitted under the scheme subject to the condition that the works done

under these categories should be durable and a one time activity i. e. '' Only Pucca, brick and stone lining'') மேற்படி பணிகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வரையறுக்கப்படாத விருப்ப நிதி ஒதுக்கீடானரூ.60 இலட்சத்தில் எடுத்துச் செய்யலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(iii) மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு மேற்கூரை செலவு உட்பட இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு அளிக்கப்படும் தொகையினை போன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வரையறுக்கப்படாத விருப்ப நிதியிலிருந்து பேரூராட்சிப் பகுதிகளில் வீடுகள கட்டிக் கொடுக்க அரசு கருதுகிறது. அதன்படி ஊரகப் பகுதியில் தொகுப்பு வீடு கட்ட அனுமதிக்கப்படும் தொகையினை போன்று பேரூராட்சி பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தனி வீடுகள் கட்டுவதற்கும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(iv) மேலும் பேரூராட்சிளில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் மற்றும் கச்சா வீடுகள் விருப்ப நிதியின்கீழ் பழுது நீக்கம் செய்ய அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயளாலர்